பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

STAFF COPY
NOT FOR SALE

உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஆவணி மீ 12 உ புதன்கிழமை (29-08-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 08 கதிர்: 179

## மக்கள் கூடியிருந்த வேளையில்

# நெல்லியடி சந்தையில் நேற்று விமானம் தாக்கி 8 பேர் பலி!

## 30 பொதுமக்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 29

நெல்லியடிச் சந்தையில் நேற்றுக் காலை கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் மீது பொம்மர்களிலிருந்து குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 8 பேர் அந்த இடத்திலேயே பலியானார்கள். முப்பதுக்கும் அதிகமான பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

பொருள்களை வாங்குவதற்காக சந்தையில் மக்கள் முண்டியடித்துக் கூடியிருந்த வேளையில் — காலை 9. 30 மணியளவில் - திடீரென வந்த பொம்மர்கள் இத்தாக்குதலை நடத்தின.

தாக்குதல்களினால் சந்தைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொம்மர் குண்டு வீச்சுக்கு அச்சுவேலியில் பெண் பலி

யாழ்ப்பாணம், ஆக 29

அச்சுவேலி மடத்தடியில் நேற்றுக் காலை பொம்மர் குண்டு வீசியதில் 40 வயதுப் பெண் ஒருவர் பலியானார்.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த அருந்ததி புலேந்திரன் என்பவரே அந்தப்பெண்ணாவார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர்கள் மானிப்பாய் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-3-5)

## நெல்லியடி, அச்சுவேலியில் காயமடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், ஆக. 29

நெல்லியடி, அச்சுவேலி பகுதிகளில் நேற்று நடந்த விமானத் தாக்குதல்களில் காயமடைந்த சிலர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நெல்லியடியில் காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்போர் வருமாறு:-

இ. சர்வானந்தம் (கரணவாய்), த. கேதீஸ்வரன் (கரணவாய்-வயது 19), க. இரத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கோட்டையைக் கைப்பற்றும் திட்டம் முறியடிக்கப்பட்டது

### எனினும் படைகள் தொடர்ந்து முயலுமாம்

கொழும்பு, ஆக 29

யாழ் கோட்டை இராணுவ முகாமை நேற்று [செவ்வாய்] கைப்பற்றி விடலாம் என்ற அரசின் திட்டம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பலமான கண்ணிவெடித் தாக்குதலினால் முறியடிக்கப்பட்டுவிட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் சொன்னார் என்று வெளிநாட்டு ஏஜென்சி செய்தி ஒன்று நேற்றிரவு தெரிவித்தது.

ஆனால் யாழ். கோட்டையை இராணுவம் எப்படியும் கைபற்றியே தீரும் என்று அமைச்சர் ரஞ்சன் சொன்னதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் —

சுமார் 2 ஆயிரம் இலங்கைப் படையினர் கண்ணிவெடிகளை அகற்றிவிட்டு மண்டை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவில் 40 ராணுவம் பலி!

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சுமார் 30 முதல் 40 படையினர் வரை கொல்லப்பட்டனர் என்று அறியவருகிறது. உர்ஜிதப் படுத்தப்படாத தகவல்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி இதனை அறிவித்தது.

மேலும் பல படையினர் காயமடைந்ததாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது. (உ-எ)

## ஈழத்தமிழர் படுகொலையைத் தடுக்க உடனே நடவடிக்கை எடுங்கள்!

### பிரதமர் சிங்கிடம் கருணாநிதி வலியுறுத்து

சென்னை, ஆக. 29

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து, உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு, அவர்களது அவதிகளைப் போக்க வேண்டும்.

பிரதமர் வி. பி. சிங்கை முதலமைச்சர் மு. கருணாநிதி மேற்கண்டவாறு வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சென்னையில் நேற்று செய்தியாளர் மத்தியில் பேசிய போது திரு. கருணாநிதியே இத்தகவலை வெளியிட்டார்.

சண்டையில் ஈடுபட்டுள்ள இருசாராரையும் அழைத்து பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண இந்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டியது முக்கிய

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அகதிகள் படகு கவிழ்ந்து ஆறு குழந்தைகள் மரணம்

சென்னை, ஆக. 29

நேற்று முன்தினம் இரவு வடபகுதியிலிருந்துஇலங்கைத் தமிழ் அகதிகளுடன் இராமேஸ்வரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு ஒன்று நடுக்கடலில் விபத்துக்குள்ளானது.

அப்போது படகில் இருந்த 6 குழந்தைகள் நீரில் மூழ்கி இறந்தன.

எஞ்சிய 27 பேரும் படகோட்டியின் சாமர்த்தியத்தினால் உயிருடன் மீட்கப்பட்டனர். (உ-எ)

## யாழ். கோட்டைக்குள் ஹெலி இறங்கியதாம்!

கொழும்பு. ஆக 29

இலங்கை விமானப்படை ஹெலிக்கொப்டர் ஒன்று கடந்த திங்கள் மாலை யாழ் கோட்டையினுள் இறங்கிப் புதிய துருப்புக்களையும் ஆயுதங்களையும் மருந்து வகைகளையும் உள்ளே இறக்கிவிட்டு, காயமடைந்த ஏழு படையினரை ஏற்றிக்கொண்டு சென்றதாக இலங்கை வானொலி நேற்றுமாலைஅறிவித்தது.

ஆனால் இந்தச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படும் நேரத்துக்குப் பின்னரும் நேற்று முழுவதும் 'அவ்ரோ'

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குவைத்திலிருந்து வெளியேறிய தமிழரை அழைத்துவர முயற்சி

யாழ்ப்பாணம், ஆக 29

குவைத்திலும் ஈராக்கிலும் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை அடுத்து அங்கிருந்து வெளியேறி சவூதி அரேபியா, றியாத், எகிப்து (கெய்ரோ) மற்றும் ஜோர்தான் ஆகிய இடங்களில் தஞ்சம் அடைந்துள்ள வடபகுதித் தமிழர்களை திருப்பி அழைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தஞ்சம் புகுந்த வடபகுதித் தமிழர்கள் 68 பேரின் பெயர், விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று வெளிவிவகார அமைச்சினால் —செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் மூலம் - யாழ் அரசஅதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக மேலதிக விவரங்கள் யாழ் அரச அதிபருக்கு பின்னர்அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(3ஆம் பக்கத்தில் பெயர்ப் பட்டியல்).

[68 பேர்களின் பெயர், முழு விலாச விவரங்களை உதயன் பணிமனையில் நேரில் பார்வையிடலாம்]

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**மலிவு விற்பனை**

V. K. M. Farm

எம்மிடம் புறொயிலர்ஸ் இறைச்சிக் கோழி என்பன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். சில்லறை விலை (50/-) தொடர்பு 12. கனகசபை லேன், (யாழ்/இந்துக் கல்லூரி பின்பக்கம்) யாழ்ப்பாணம்.

[14102]


### கட்டாக்காலி மாடுகள்

சாவகச்சேரி. ஆக. 29

நுணாவில் மேற்குப் பகுதியில் கட்டாக்காலி மாடுகளால் பயிர்கள் அழிக்கப்படுகின்றன. (இ-31)

# மண்டைதீவில் ஷெல் தாக்குதலுக்கு தாயாரும் 3 பிள்ளைகளும் பலி!

## தந்தை நஞ்சருந்தித் தற்கொலை

யாழ்ப்பாணம், ஆக. 29

மண்டைதீவுப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மூன்று பிள்ளைகளும் உயிரிழந்தனர். இதனையடுத்து தகப்பனார் நஞ்சு அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

அப்பகுதியிலிருந்து தப்பி வந்த ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஏகாம்பரம் என்பவரே இவ்வாறு நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அப்பகுதியிலிருந்து கிடைத்த மேலும் சில தகவல்கள் வருமாறு:-

★ மண்டைதீவு மகாவித்தியாலய ஆசிரியை செல்வி ரமணி ஷெல் தாக்குதலினால் உயிரிழந்துள்ளார்.

★ இராணுவம் தற்போது மண்டைதீவு ஆஸ்பத்திரி பிள்ளையார் கோயில் ஆகியவற்றிலும், அல்லைப்பிட்டியிலும் நிலைகொண்டுள்ளனர்.

★ படையினர் தமது இராணுவ நடவடிக்கைகளின் போது மனித கேடயமாகப் பாவிப்பதற்கு வசதியாக நூற்றுக்கணக்கான ஆண்களைத் தொடர்ந்து தடுத்து வைத்திருக்கின்றனர்.

★ தொடர்ந்து மக்கள் அல்லைப்பிட்டி, மண்டைதீவு, மண்கும்பான், நாரந்தனை ஆகிய பகுதிகளில் இருந்து அராலித்துறைப் பகுதியை நோக்கி இரவோடு இரவாக இடம்பெயர்ந்து வருகிறார்கள்.

★ இராணுவம் நடமாடிச் சென்ற பகுதிகளில் ஒரே அழுகுரல் ஒலித்த வண்ணம் இருக்கின்றன படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் ஆங்காங்கே போட்டு எரிக்கப்பட்டிருக்கின்றன. (உ)

### பீரங்கி தாக்குதலால் இடம்பெயர்வு

கொழும்புத்துறை, ஆக. 29

கொழும்புத்துறை, குருநகர்ப் பகுதிக் கடலில்இருந்து ஏவப்படும் பீரங்கி, ஷெல் தாக்குதல்களுக்கு அஞ்சி மக்கள் இடம்பெயர்கின்றனர்.

பாஷையூர், ஈச்சமோட்டை கொய்யாத்தோட்டம், வளன்புரம், துண்டி, கொழும்புத்துறை, வசந்தபுரம், மணிப்புரி மக்களே பெரும் அளவு இடம்பெயர்ந்து வருகின்றனர். [இ-30]

### வயிற்றோட்டம் அகதிப் பெண் மரணம்

கொழும்புத்துறை, ஆக. 29

கொழும்புத்துறை கிழக்கு துரையப்பா வித்தியாசாலை அகதிமுகாமில் தஞ்சமடைந்திருந்த குருநகரைச் சேர்ந்த வயதுபோன பெண் ஒருவர் வயிற்றோட்ட நோயினால் திங்கட்கிழமை மரணமானார். [இ-30]

## 31ஆம் நாள் நன்றி நவிலல்

**உயர்திரு**

**மாரிமுத்து சின்னதம்பி**

(சிவா பிறதர்ஸ் உரிமையாளர், வவுனியா)

**தோற்றம்:** 03 - 03 - 1936

**மறைவு:** 29 - 07 - 1990

எமது குடும்பத் தலைவரினது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்த உறவினர்கள், நண்பர்கள், யாபேருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:

**குடும்பத்தினர்.**

ஓமந்தை,
வவுனியா.

[14108]

### மன்னார் ஹட்டன் நஷனல் வங்கி

யாழ்ப்பாணம். ஆக. 29

மன்னார் ஹட்டன் நஷனல் வங்கி வாடிக்கையாளரின் நலன் கருதிக் கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் மட்டுப்படுத்தப்பட்ட கொடுக்கல், வாங்கல்களைச் செய்கின்றது, நாட்டின் சூழ்நிலைக்கேற்ப இது நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### கட்டட ஒப்பந்தக்காரர் சங்கம்

திருநெல்வேலி, ஆக. 29

யாழ்ப்பாண மாவட்ட கட்டட ஒப்பந்தக்காரர் சங்கம் பாடசாலைகள் கட்டியதன் மூலம் தமக்குச் சேரவேண்டிய சுமார் ஐம்பத்தைந்து இலட்சம் ரூபாவை உடன் அனுப்பிவைக்கும்படி யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஊடாக வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கேட்டுள்ளது. (இ-143)

### வாகனத்துக்கு இருவர் பலி

கொழும்பு ஆக. 29

வீதியை கடக்க முயன்ற பேத்தியும், பேரனும் வாகனத்தில் மோதுண்டு பலியானார்கள்.

கடந்த சனிக்கிழமை பகல் இந்தச் சம்பவம் வெள்ளவத்தையில் இடம் பெற்றது.

வெள்ளவத்தையைச் சேர்ந்த திருமதி சுந்தரம்பிள்ளை அவரது பேரன் மகேசபாலன் மயூரன் (எட்டு வயது) இருவரும் வீதியை கடக்க முயன்றபோதே வாகனத்துடன் மோதுண்டு பலியானார்கள்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையை சேர்ந்த இவர்கள் கொழும்பில் வாழ்ந்து வந்தனர். (இ-3)

### போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 29

ஊர்காவற்றுறையில் கடந்த வியாழக்கிழமை இராணுவத்தினருடனான மோதல்களின் போது 4 விடுதலைப் புலிகள் போராளிகள் வீரமரணமடைந்தனர்.

இரண்டாவது லெப். சின்ன அலபேட் (அ. தனீஸ்வரன் - நீர்வேலி), விக்னா (சி. சதீஸ்வரன் - கந்தளாய்), பிரதீஸ் (வீரேந்திரன் - செங்கலடி), பாபுஜீ (ஐயத்துரை அருட்செல்வம் - காங்கேசன்துறை) ஆகியோரே இந்த நான்கு போராளிகள் ஆவர். (இ-5)


## மலிவு விற்பனை

சுத்தமாக்கப்பட்ட, தரம் வாய்ந்த இறைச்சிக் கோழி (Dressed Chicken) மிக மலிவான விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

காலை முதல் மாலை வரை எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

குறைந்த அளவிலேயே கையிருப்பு உண்டு.

**வாருங்கள்! வாங்குங்கள்!!**

392. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[உதயன் பணிமனைக்கு அருகில்]

[C-5178]


## மரண அறிவித்தல்கள்

### டாக்டர் சத்தியமூர்த்தி - திருமதி டாக்டர் சத்தியமூர்த்தி

Dr சத்தியமூர்த்தி, திருமதி தர்மவல்லி சத்தியமூர்த்தியும் [லண்டன்] 15-08-90 இல் மலேஷியாவில் அகாலமரணமடைந்தனர். இவர்கள் வசீகரன் [கேம்பிறிட்ஜ் டல்கலைக்கழகம்], ஆனந், சிவகரன் ஆகியோரின் பெற்றோரும்; காலஞ்சென்ற அரியரத்தினம் தம்பதிகளின் மகனும் மருமகளும்; Dr தர்மலிங்கம் தம்பதிகளின் [லண்டன்] மகளும் மருமகனும்; சிவரத்தினம் [கணக்காளர் சம்பியா], தங்கபூபதி, காலஞ்சென்ற இரத்தினபூபதி, காந்தபூபதி ஆகியோரின் சகோதரனும்; தர்மவதி, Dr. தர்மசோதி, Dr தர்மராணி ஆகியோரின் சகோதரியும் ஆவர். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

**ச. செல்லத்துரை.**

89, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(13924)

### டாக்டர் ச. சிவலிங்கம்

M.B.B.S., Ph.D., D. C. P., F. R. C. P.

டாக்டர் சங்கரப்பிள்ளை சிவலிங்கம் அவுஸ்திரேலியாவில் 25-08-90 இல் காலமானார். இவர் கரைவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. சங்கரப்பிள்ளை திருமதி சங்கரப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வரும், நல்லூரைச்சேர்ந்த காலஞ்சென்ற நீர்ப்பாசனபொறியியலாளர் திரு. மருதப்பு திருமதி மருதப்புவின் அருமை மருமகனும், சந்திரோதயத்தின் அருமைக் கணவரும், சிவகுமார், அனுஷ்யா, சந்திரிக்கா, ரேணுகாவின் அன்புத் தந்தையும்; (ஹற்றன் தேசிய வங்கி) ஆலோசகர் தருமராஜாவின் மைத்துனரும், இராஜலிங்கம் குணலிங்கம், திருமதி தவத்துரை, திருமதி கணேசமூர்த்தி, திருமதி சோமசுந்தரம் ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார். ஈமக்கிரியைகள் 27-08-90 இல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது.

தகவல்:

**திருமதி ச. மருதப்பு.**

80 - குறுக்குவீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[14107]

## மரண அறிவித்தல்கள்

**திருமதி**

### சுந்தரம்பிள்ளை தங்கலட்சுமி

**அவரது பேரன்**

### மயூரன்

திருமதி சுந்தரம்பிள்ளை தங்கலட்சுமியும், அவரது பேரன் மயூரனும் வெள்ளவத்தையில் வீதி விபத்தில் அகாலமரணமானார்கள்.

தங்கலட்சுமி - சுந்தரம்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவபாலன், மகேசபாலன், குணபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

மயூரன் திரு. திருமதி மகேசபாலன் விமலா தம்பதிகளின் அன்புமகனும் சஞ்சீவனின் அன்புச் சகோதரனுமாவார்.

இவர்களின் ஈமக்கிரியைகள் 28-08-90 செவ்வாய்க்கிழமை கனத்தை மயானத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:

**குடும்பத்தினர்.**

(14110)

**திருமதி**

### திருநாவுக்கரசு தையல்நாயகம்

சங்கானை கிழக்கு தொட்டிலடியைச் சேர்ந்த திருநாவுக்கரசு தையல்நாயகம் அவர்கள் 26-08-90 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் எய்தினார்.

இவர் சின்னத்தம்பி திருநாவுக்கரசுவின் (மலாயன் பென்சனர்) அன்பு மனைவியும், சிவதட்சணாமூர்த்தி (இளைஞர் சேவை அதிகாரி மாவட்ட முகாமையாளர் நிஸ்கோ கிளிநொச்சி)யின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 27-08-90 திங்கட்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று சங்கானை விளாவெளி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

தகவல்:

**தி. சிவதட்சணாமூர்த்தி**

[14109]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதநீர் உற்பத்திக்கு கோரிக்கை

பச்சிலைப்பள்ளி, ஆக. 29
பச்சிலைப்பள்ளி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் சீவல் தொழிலாளர்கள் கள்ளுக்குப் பதிலாகப் பதநீர் உற்பத்தியை அதிகரித்து வழங்க வேண்டும்.

சங்கத் தலைவர் செ. தனபாலசிங்கம் மேற்கண்டவாறு சகல சீவல் தொழிலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

பனம் வெல்ல உற்பத்தியை அதிகரிக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பதநீர் உற்பத்திக்குத் தேவையான சுண்ணாம்பு சங்கத்தினால் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ - 117)

## மட்டக்களப்பு பொலிஸாரே சோதனை

கொழும்பு, ஆக. 29
மட்டக்களப்பு நகரில் நடமாடும் பொதுமக்களை இராணுவத்தினர் சோதனையிடுவது நிறுத்தப்பட்டிருப்பதாகவும்—

தமிழ், முஸ்லிம் பொலிஸாரே சோதனைகளை நடத்துவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு 'சென்றி'யில் சோதனையிடப்பட்ட பிறகு வசக்கிளில் ஏறிச் செல்ல அனுமதிக்கப்படுவதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன. (- எ)

# கப்பலில் வந்த உணவை வழங்க ஊரடங்கை தளர்த்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 29
பருத்தித்துறைக்கு கொண்டு வரப்பட்ட உணவுப் பொருள்களை குடாநாட்டின் மற்றைய பகுதிகளுக்கு விநியோகிக்க வசதியாக ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட வேண்டும்.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

பருத்தித்துறையில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதால், அங்கு உணவுப் பொருள்கள் கப்பலில் இருந்து தற்போது இறக்கப்பட்டு வருகின்றன.

இறக்கப்பட்டு பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருள்களை மற்றைய பகுதிகளுக்குக் விநியோகிக்க ஊரடங்கு உத்தரவு தடையாக உள்ளது.

இதைத் தொடர்ந்தே அரச அதிபர் இந்தக் கோரிக்கையை வி த்துள்ளார். [இ-3]

# குவைத்திலிருந்து வெளியேறிய வடபகுதித் தமிழர் விவரம்

யாழ்ப்பாணம், ஆக. 29
குவைத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளை அடுத்து அங்கிருந்து வெளியேறி சவூதி எல்லையூடாக தலைநகர் றியாத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் 54 வடபகுதித் தமிழர்களினதும் —

றியாத், ஜோர்தான், கெய்ரோ ஆகிய இடங்களில் சிக்கிப் போயிருக்கும் வேறு 14 வடபகுதித் தமிழர்களினதும்பெயர்ப்பட்டியல்கள் உதயனுக்கு கிடைத்திருக்கின்றன:

### றியாத்தில் தங்கி நிற்போர்

★ வி. கந்தையா குணாளன் (வேலணை), எம். பொன்னையா பற்குணராஜா (ஊர்காவற்றுறை), என். பயஸ் டேவிட் (குருநகர்), எஸ். அண்ணாமலை தம்பிராஜா (தொண்டமனாறு), நாகராஜா பாலேந்திரன் (ஊர்காவற்றுறை), எஸ். வேலன் (கந்தர்மடம் - யாழ்ப்பாணம்), கந்தையா சிவகுமார் (சங்கானை), எஸ் சந்திரகுமார் (இளவாலை), ஈ குகதாஸ் (அல்லைப்பிட்டி), ஐ ஏ பியலிக்ஸ் (புங்குடுதீவு)

ஆர். கந்தன் (மானிப்பாய்) எல். ஏ. லியோன் (ஊர்காவற்றுறை), ஆர். பத்மராஜா (அரியாலை), என். குகணேஸ்வரன் (அரியாலை), ரி. மரியதாஸன் (நெடுந்தீவு மத்தி), கே. கந்தசாமி (ஊர்காவற்றுறை), பி. ஏ. கிளரென்ஸ் [கொழும்புத்துறை], கே. சிவராஜா [ஆனைக்கோட்டை]. எஸ் லோகராஜா [சுன்னாகம்], பி. ஜசீகரன் [மல்லாகம்].

ரி. தவராஜா [திருநெல்வேலி-யாழ்ப்பாணம்), ஈ. கணேசமூர்த்தி [அச்சுவேலி], கே. சிவமோகன் [அச்சுவேலி] எஸ். விஜயராஜா [அச்சுவேலி], ஆர். குருகுலசிங்கம் [சாவகச்சேரி], எஸ். சக்திவேல் [கரவெட்டி], கே பொன்னம்பலம் [சாவகச்சேரி]. எஸ் சிவநேசன் [சாவகச்சேரி], கே. சந்திரபாலா [மானிப்பாய்], ஏ. பாலசுந்தரம் [பண்டத்தரிப்பு]

ஏ. தம்பித்துரை (அளவெட்டி), எஸ், கனகலிங்கம் [மானிப்பாய்], என். தணிகாசலம் [மானிப்பாய்], கே. சிவலிங்கமூர்த்தி [வரணி]. ரி. தேவதாஸ் [மானிப்பாய்)

[மிகுதி தொடரும்]

## சத்தியாவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 29
கடந்த 23 ஆம் திகதி வியாழன் மாங்குளம் இராணுவத்துடனான மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சத்தியா வீரமரணமடைந்தார்.

விடுதலைப்புலிகள் இவருக்கு தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். [இ-5]

## இலங்கைக்கு புதிய நெருக்கடி

கொழும்பு, ஆக. 29
மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிந்து வரும் சுமார் 5 லட்சம் இலங்கையர் தாயகம் திரும்புவதால் நாட்டின் பொருளாதார நெருக்கடி புதிய கோணத்தில் உருவாகும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இப்படி கொழும்பில் பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து ஏற்பட்டு உள்ள வளைகுடா நெருக்கடி யுத்தமாக மாறும் கட்டத்தை அடைந்துள்ளது.

இதன் காரணமாக வளைகுடா நாடுகளில் பணிபுரிந்து வந்த இலங்கையர் உட்பட சகல வெளிநாட்டவரும் அவசரமாக தாயகம் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். [இ-எ]

# மருந்துப் பொருள்களை கப்பலில் தருவிக்க முயற்சி!

யாழ்ப்பாணம், ஆக. 29
வடமாகாணத்துக்கு இவ்வருடத்தின் மூன்றாம் காலாண்டில் வழங்கப்பட வேண்டிய மருந்துப் பொருள்களை உடனே இங்கு தருவிப்பதற்கான முற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

அண்மையில் கொழும்புக்குச் சென்றிருந்த வடபிராந்திய சுகாதார அத்தியட்சகர், வவுனியா பிராந்திய அத்தியட்சகர் ஆகியோர் இது சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் செயலாளருடன் இரு அத்தியட்சகர்களும் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து மருந்து வகைகளை அனுப்ப கொழும்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [உ-3]

# குவைத்திலுள்ள உறவினரை திருப்பி அழைக்க சலுகை

கொழும்பு, ஆக 29
குவைத்தில் உள்ள தங்கள் உறவினர்களை திருப்பி அழைக்க ஏற்படும் விமான பயணக் கட்டணத்தை பதினொரு தவணைகளில் திருப்பிச் செலுத்தும் திட்டம் ஒன்றை அரசு தயாரித்துச் செயல்படுத்த ஆரம்பித்திருக்கிறது.

இதற்கிணங்க குவைத்தில் உள்ள தனது உறவினரை திருப்பி அழைக்க விரும்புபவர், தன்னிடம் உள்ள சிறிது பணத்தை முதலில் செலுத்த வேண்டும் பின்னர் எஞ்சிய தொகையை பதினொரு தவணைகளில் செலுத்த சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## காணாமற் போன

# மருத்துவபீட மாணவன் மதவாச்சியில் கொலையுண்டார்!

கொழும்பு, ஆக. 29
கொழும்பிலிருந்து கடந்த மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டுச்செல்லும் வழியில் - இடைநடுவில் - காணாமற் போனதாகக் கருதப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவன் எஸ். சிவபாலன் கொலை செய்யப்பட்டிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

உயிரிழந்த சிவபாலன் யாழ் மருத்துவபீட சட்ட வைத்தியபேராசிரியர் சரவணபவானந்தனின் இளைய மகனாவர். இவரது தாயாரும் அதே பீட விரிவுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவபாலனைக் கொலை செய்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் -

உயிரிழந்தவரிடமிருந்து அபகரிக்கப்பட்டதாகக் கருதப்படும் தங்கச்சங்கிலி ஒன்று மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிவபாலன் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணம் செய்யும் வழியில் - மதவாச்சிக்கும் வவுனியாவுக்கும் இடையில் - வைத்து - சிவில் உடையில் சோதனையில் ஈடுபட்டிருந்த நால்வரினால் முகாம் ஒன்றுக்கு வருமாறு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் —

அதனை அடுத்தே அவர் காணாமற் போனதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பனாட்டு உற்பத்தி

பச்சிலைப்பள்ளி, ஆக. 29
பளைப்பகுதியில் இம்முறை பனாட்டு உற்பத்தி பெருமளவு அதிகரித்துள்ளது. உணவுத் தட்டுப்பாடே இதற்குச் காரணம் ஆகும். (இ - 117)

## ஜனாதிபதி கூறுகிறார்:

# யுத்தம் புரியக் கேட்டவர்கள் இன்று நிறுத்தக் கேட்கின்றனர்

கொழும்பு. ஆக. 29
விடுதலைப் புலிகள் மீது யுத்தம் நடத்துமாறு அன்று சொன்னவர்களே, இன்று அதைநிறுத்தச் சொல்லி முப்படைகளைக் கேட்கிறார்கள்.

ஜனாதிபதி பிரேமதாஸா தும்மல சூரியாவில் நடந்த ஐ. தே. க. பொதுக்கூட்டத்தில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் இருந்து வன்முறையை ஒழிக்க வேண்டும் என்பதற்காகவே ஆயுதபடையினர் இன்று உயிர்த்தியாகம் செய்து வருகிறார்கள் என்றும்—

அதில் உயிரிழக்கும் படையினரின் குடும்பங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு மக்களைச் சார்ந்தது என்றும ஜனாதிபதி சொன்னார். (இ-எ)

# மக்களைக் கேடயமாகப் பாவித்த சிப்பாய்கள் வேட்டுச் சத்தம் கேட்டதும் தப்பி ஓடினர்

## தப்பி வந்த இளைஞர் தகவல்

யாழ்ப்பாணம், ஆக. 29
படையினர் பிடித்து, தங்களுடன் மனித கேடயமாக அழைத்துச் சென்ற ஆண்களில் - மூன்று - இளைஞர்கள் - தந்திரமாகத் தப்பி வந்திருக்கின்றனர்.

நாரந்தனையைச் சேர்ந்த அன்ரனி வெபிலன் (வயது 20). சார்ள்ஸ் ஜோன் ரஞ்சித்குமார் (வயது 20), குணாளன் (வயது 20) ஆகியோரே இவ்வாறு தப்பி வந்தவர்களாவர்.

தங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் குறித்து அன்ரனி வெபிலனும். ரஞ்சித்குமாரும் கூறியதாவது:-

நாரந்தனையில் வீடொன்றில் வைத்து ஆண்களும் பெண்களுமாக எங்களில் 54 பேரை படையினர் பிடித்தனர்.

பெண்களை கோயில் ஒன்றில் தங்க விட்ட படையினர் ஆண்களை அழைத்துக் கொண்டு - பிற இடங்களிலும் பிடித்த ஆண்களையும் சேர்த்து அழைத்துக் கொண்டு - மண்டைதீவுப் பக்கமாக முன்னேறினர்.

தாங்கள் பிடித்த அப்பாவிகளை முன்னும், பின்னும் பக்கத்திலும் சூழவிட்டு நடுவில் படையினர் வந்து கொண்டிருந்தனர்.

நாங்கள் ஒரு கரையில் வந்து கொண்டிருந்தோம். வீதியின் அந்தப் பக்கத்தில் கடற்பகுதி இருந்தது.

ஆரம்பத்தில் எதிர்ப்பு ஏதுமின்றி படையினர் சற்றுத் தூரம் முன்னேறினர் ஓரிடத்தில் வந்த போது திடீரென விடுதலைப் புலிகள் படையினரை எதிர் கொண்டு வேட்டுக்களைத் தீர்த்தனர்.

வேட்டுச் சத்தம் கேட்டதும் படையினர் எங்களை விட்டு விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர்,

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாங்கள் [illegible] முன்னேறினோம்.

மண்டைதீவுப் பகுதியில் வைத்து எங்களைச் சந்தித்த விடுதலைப்புலிகள் எங்களைக் காப்பாற்றி பாதையின் வழியாக கரைசேர்த்தனர்.

எங்களுடன் தப்பி வந்த குணாளனை விட்டுப் பிரிந்து விட்டோம். அவர் எங்கு இருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியாது.

படையினரால் பிடிக்கப்பட்டு மனித கேடயமாக கொண்டு செல்லப்பட்ட எமது சகோதரர்கள், தந்தை, சித்தப்பா ஆகியோருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. (உ)

## கண்ணியில் 4 படையினர் படுகாயம்

கொழும்பு. ஆக. 29
கஞவாஞ்சிக்குடியில் விடுதலைப்புலிகள் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில் 4 படையினர் படுகாயமடைந்ததாக கொழும்பில்இராணுவத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை வேலணை: பயம் கலந்த அமைதி!

யாழ்ப்பாணம், ஆக. 29
ஊர்காவற்றுறை, நாரந்தனை, வேலணைப் பகுதிகளில் பயம் கலந்த அமைதி நிலவுகிறது

ஊர்காவற்றுறையில் இருந்து அல்லைப்பிட்டி வரையிலான பகுதிக் கிராமங்களில் உள்ள மக்கள் பதற்றத்துடனேயே வாழ்கின்றார்கள்.

அங்குள்ள கடைகள் படையினரால் கொள்ளையடிக்கப்பட்டதால், உணவுப்பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது

மக்கள் எந்நேரம் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடனேயே அங்கு வாழ்கின்றார்கள்.

குடாநாட்டில் இருந்து அகதிகளாகச் சென்றவர்கள் அங்கிருந்து திரும்புகிறார்கள். [இ-3-ரி]

# ஈராக்கின் ஒரு மாகாணமாக குவைத் நேற்று பிரகடனம்

பக்தாத், ஆக. 29
ஈராக்கின் பத்தொன்பதாவது மாகாணமாக குவைத் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான ஜனாதிபதியின் ஆணை நேற்று பிறப்பிக்கப்பட்டது.

குவைத் நாட்டை ஈராக் படையெடுத்துப் பிடித்ததும்-

அதன்பின்னர் ஈராக்கில் இருந்து பிரிக்கப்பட முடியாத பகுதியாக குவைத் ஈராக்குடன் இணைக்கப்பட்டதாக ஜனாதிபதி சதாம் ஹுசேன் பிரகடனம் செய்ததும் தெரிந்தவையே. [அ-எ]

## தாழப் பறந்த பொம்மர்கள்

காரைநகர்ப் பகுதியில் இருந்து வந்த இரு பொம்மர் விமானங்கள் நேற்றுக் காலை 9-30 மணியளவில் பொன்னாலைப்பகுதியில் தாழப் பறந்து நோட்டமிட்டுச் சென்றன.

ஒரு பொம்மர் கடற்பகுதிக்கு மேலாகவும், அடுத்தது நிலப்பகுதிக்கு மேலாகவும் தாழப் பறந்து சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

# 500 ரூபா நாணயம்

கொழும்பு, ஆக 29
இலங்கை மத்திய வங்கி 500 ரூபா நாணயக் குற்றி ஒன்றை நேற்று வெளியிட்டது

வங்கியின் நாற்பதாவது ஆண்டு நிறைவையொட்டி இந்த நாணயக் குற்றி வெளியிடப்பட்டது.

நாணயத்தின் முதல் குற்றி பிரதமரும் நிதி அமைச்சருமான திரு. டி. பி விஜேதுங்காவிடம் மத்திய வங்கியின் ஆளுனரால் கையளிக்கப்பட்டது. [அ]

## கல்லடியில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், ஆக 29
மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாமிற்கு வெளியே நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு குழுமிநின்ற படையினர்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் பலியானார். நான்கு பேர் காயமுற்றனர். [உ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 29
கடந்த 21ஆம் திகதி யாழ். கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் காயமுற்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி பிரதீபன் நேற்று வீரமரணம் அடைந்தார். (உ)

## கைதானோரில் பலர் விடுதலை

யாழ்ப்பாணம், ஆக. 29
ஊர்காவற்றுறை இராணுவ நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் விடுவிக்கப்பட்டதாக அறியவருகிறது

அல்லைப்பிட்டியில் இருந்து இராணுவத்தினர் மண்டைதீவை அடைந்த பின்பே இவர்கள் விடுதலையானார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கன்னியாவில் இராணுவம் பலி!

யாழ்ப்பாணம், ஆக. 29
கன்னியாவில் நேற்று முன் தினம் விடுதலைப் புலிகளின் நிலை ஒன்றைச் சுற்றி வளைத்த படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## அத்தியட்சகர் கால் இழந்தார்

யாழ்ப்பாணம், ஆக. 29
முல்லைத்தீவு, இரணைப் பாலம் பகுதியில் நேற்று முன் தினம் பொம்மர் ஒன்று றொக்கட் தாக்குதலை நடத்தியது.

றொக்கட் தாக்குதலில் முல்லைத்தீவு மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. ஏ. குணரத்தினம் (வயது 54) படுகாயமடைந்தார். மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவரது வலது முழங்காலுக்குக் கீழே உள்ள பகுதி கழற்றப்பட்டது. (ஒ-5-3)

## ஈழத் தமிழர்...

[1ஆம் பக்கத்தொடர்ச்சி]

மான கடமை ஆகும்.

தமிழீழத்தில் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டிருக்கிறது.

சிங்கள இராணுவம் அப்பாவித் தமிழர்களைக் குண்டு வீசிக் கொன்று விட்டு தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொன்றுவிட்டதாகச் செய்திகளை வெளியிட்டு வருகிறது.

— இப்படி திரு. கருணாநிதி தெரிவித்தார். (இ-எ)

# கைக்குண்டு வீசி தாக்கியதில் இரு படையினர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஆக. 29
அக்கரைப்பற்றில் கடந்த ஞாயிறன்று போராளிகள் மீது படையினர் பதுங்கி இருந்து நடத்திய தாக்குதலின்போது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் மேகன் என்பவர் காயமுற்றார்.

அவரைப் படையினர் கைது செய்ய முயன்றபோது அவர் தம்வசம் இருந்த கைக்குண்டை வீசிவிட்டு சயனைட் உட்கொண்டு மரணமடைந்ததாகவும் —

கைக்குண்டு வெடித்ததில் இரண்டு படையினர் உயிரிழந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்தச் சம்பவத்தின் பின்னர் படையினர் அப்பகுதியில் இரு பொதுமக்களைச் சுட்டுக் கொன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## குண்டு வீச்சில் 4பேர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 29
மட்டக்களப்பு மாவட்டம் சோனகன் வெட்டை என்ற இடத்தில் நேற்று இடம்பெற்ற விமானத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்குபேர் உயிரிழந்தனர்.

பெரியதம்பி சண்முகம் (வயது 55) சண்முகம் தேவராசா (வயது 27) சண்முகம் தில்லையம்மா (வயது 22) சண்முகம் பொன்னம்மா (வயது 18) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர் [உ]

## அகதிகள் எண்ணிக்கை ஒரு லட்சம்

இலங்கையில் இருந்து தமிழ் நாடு வந்த தமிழ் அகதிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்றும்—

விரைவில் இந்த எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டிவிடும் என்றும் முதலமைச்சர் கருணாநிதி நேற்றுச் செய்தியாளரிடம் தகவல் வெளியிட்டார். (உ-எ)

## ராஜினாமா!

புதுடில்லி, ஆக. 29
இந்திய மத்திய சட்ட நீதித்துறை அமைச்சர் தினேஷ் கோஸ்வாமி நேற்று ராஜினாமாச்செய்தார். (உ-எ)

## நெல்லியடி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினம் (வயது 58), கண்ணன் (வயது 15), க. சந்திரகுமாரன் (நெல்லியடி - வயது 32), இ. வர்ணகுமார் (கரவெட்டி- வயது 19), எஸ் அகமது (வயது 63), எம். சண்முகேஸ்வரமூர்த்தி (அல்வாய் - வயது 34), ஜெயா (வயது 14).

அச்சுவேலியில் காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்போர் வருமாறு:-

சின்னாச்சி (வயது 75), க. ராணி [வயது 25], சிறிஸ்காந்தா (வயது25), ஏ.இராஜகோபால், கா. இராசதுரை (வயது 40). (ஒ-5-3)

## யாழ்...

[1ஆம் பக்கத்தொடர்ச்சி]

விமானம் ஒன்று முழுமூச்சாக யாழ் கோட்டைக்குள் பொட்டலங்களை வீசுவதில் ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது. (உ)

## கோட்டையை...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

தீவு தாம்போதியைக் கடந்து யாழ். கோட்டை நோக்கி முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று இலங்கை வானொலி அறிவித்தது. (உ-எ)

## நெல்லியடிச் சந்தையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியிலும் நகரப் பகுதியிலும் இருந்த பல கடைகள் சேதமுற்றன.

பெண்கள், சிறுவர்கள் உட்பட உயிரிழந்த எட்டுப் பேரில் ஆறு பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் —

சின்னாபின்னமாகிக் கிடந்த மற்றைய இருவரின் சடலங்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமுற்றோரில் 16 பேர் மானிப்பாய் ஆஸ்பத்திரியிலும், 14 பேர் மந்திகை ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டனர்.

மந்திகை வைத்தியசாலையில் கடமையாற்றும் பிரஞ்சு டாக்டர்களின் இணைப்பதிகாரி நேரடியாகச் சம்பவம் நடந்த இடத்துக்கு வந்து காயமடைந்தவர்களை மந்திகை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்ல உதவினார். [உ-5-3]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆசீர்வாதம் செல்லம்மா

இளவாலையைச் சேர்ந்த திருமதி ஆசீர்வாதம் செல்லம்மா 26-8-1990ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற தியோகு ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும், தம்பு (தவம் - விவசாயத் திணைக்களம், வவுனியா), சந்திரா, சாந்தகுமாரி பாலச்சந்திரன் [ஜேர்மனி], காலஞ்சென்ற விஜயகுமார், பிரதீப்குமார் [பிரான்ஸ்], சந்திரசேனா ஆகியோரின் அன்புத்தாயாரும், வலன்ரைன், அமிர்தாஞ்சன் [சிமேந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை], விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், சின்னத்தங்கம், மாணிக்கம் சண்முகம் [ஆசிரியை வவுனியா றம்பைக்குளம் மகா வித்தியாலயம்], நல்லையா, பொன்னையா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 27 - 8 - 1990 அன்று இளவாலையில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
தம்பு [தவம்]
மகன்

கல்லூரி வீதி,
இளவாலை.

(13925)

## பொன்னம்பலம் கிருஷ்ணபிள்ளை

ஊர்காவற்றுறை நாரந்தனை கிழக்கைச் சேர்ந்த பொன்னம்பலம் கிருஷ்ணபிள்ளை 24 - 08 - 90 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமானார்.

இவர் காலஞ் சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், கி. சதாசிவம், கி. நடராஜா (கொழும்பு வர்த்தகர்), கி. துரைராஜா (பொறியியலாளர், பெருந்தெருக்கள் திணைக்களம், மன்னார்), கி. பாலசுந்தரம் (உரிமையாளர் அஸ்வினி அரிசி ஆலை, வவுனியா), கி. சிவராஜா (பிரதம எழுது வினைஞர், உதவி அரச அதிபர் பணிமனை, வவுனியா), திருமதி. மா. தவமணிதேவி, காலஞ்சென்ற கி பொன்னம்பலம் ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி ச. பவளம்மா, காலஞ் சென்ற திருமதி. ந செல்வதி, திருமதி. து. பாலசரஸ்வதி, திருமதி. பா. விஜயராணி. திருமதி சி காந்திமதி, திரு மு. மாணிக்கவாசகர் (இராணி அரிசி ஆலை, வவுனியா), திருமதி பொ. கலாவதி ஆகியோரின் அன்பு மாமனாருமாவர்.

அன்னாரது மரணச் சடங்கு 24 - 08 - 90 அன்று நாரந்தனையில் நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

60, மணல்தறைலேன்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்

தகவல்;
மக்கள், மருமக்கள்.
(13925)

# மரண அறிவித்தல்

## ஜே. சி. தம்பிராசா
[Jacky]

ஜேம்ஸ் கிறிஸ்டதாஸ் தம்பிராசா [இளைப்பாறிய புகையிரதப் பாதுகாவலர்] 28 - 08 - 90 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னார் காலஞ் சென்ற திரு. திருமதி. கிறிஸ்டதாஸ் [தெல்லிப்பளை] ஆகியோரின் அன்பு மகனும், காலஞ் சென்ற திரு. திருமதி. ஜோன் வேதிங்டன் [வட்டுக்கோட்டை] ஆகியோரின் மருமகனும், கிளாடிஸ் தவரட்ணராணியின் அன்புக் கணவனும். யோண் [U K], Dr ரஞ்சிற் [U.K], குளோரியா, லில்லி [வவுனியா], றொபின் [தொழில் நுட்பக் கல்லூரி, வட்டுக்கோட்டை], ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுகந்தினி [U.K] டில்நக்ஷனி [U.K], அமிர்தநாதன் (குணாளன், கனடா], Rev. நவீந்திரனுாயன் [வவுனியா], ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஜீவ், சஞ்ஜீவ், ருக்ஷான் [U.K], சுஜாதா [U.K], ட்றிஜீவ், ஜீவா, ஜீவிதா, கிஷா [U.K], பிரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று [29 . 08 . 90] புதன் மாலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வட்டுக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதான வீதி,
வட்டுக்கோட்டை

தகவல்;
றொபின் தம்பிராசா.
[13927]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org